# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**144/2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. முகமதுஅலி | ஊர் | : | திருப்பந்துறுத்தி |
| த.பெ. | : | திரு. பக்கீர்மைதீன் | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 65 | தொழில் | : | எலக்ட்டிரிசியன் கேபிள் வேலை |

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21-ஆம் நாள் **பி.சா. 2 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

முதல் விசாரணை

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 10.3.1967 தேதியிட்ட 2ஆம் பிரதிவாதியாகிய பாத்திமாஜான் என்பவரின் கணவராகிய அப்துல்ஜப்பாரின் முதல் மனைவி கைரூன்பீவி என்பவர் முருகம்மாள் என்பவரிடம் 27.3.1967 பதிவு செய்ததற்கான கிரையம் கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ. 1**ஆகும். 9.8.1988 தேதியிட்ட கைரூன்பீவி கணவர் M.A.A ஜப்பார் என்பவர் தாவா இடத்தை 2வது மனைவியும் 2ஆம் பிரதிவாதியாகிய பாத்திமாஜானுக்கு எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ. 2**ஆகும். 26.71988 தேதியிட்ட M.A,A ஜப்பார் எனபவர் 1ஆம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.3** ஆகும். 5.12.2002 தேதியிட்ட 1ஆம் பிரதிவாதி 3ஆம் பிரதிவாதிக்கு கடந்த 5.12.2002 ல் எழுதப்பட்ட பொது அதிகார ஆவணம் 5.12.2002ல் பதிவு செய்யபட்டது சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ. 4**ஆகும். 26.8.2003 தேதியிட்ட 2ஆம் பிரதிவாதி 3ஆம் பிரதிவாதிக்கு கடந்த 18.8.2003ல் எழுதப்பட்ட பொது அதிகார ஆவணம் 26.8.2003ல் பதிவு செய்யப்பட்டது சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ. 5**ஆகும். 13.08.2003தேதியிட்ட 1.1.1965 முதல் 10.08.1986 வரை

உள்ள காலத்திற்கு தாவா இடத்தின் புல எண் 28/1B பிளாட் எண் 202 சம்மந்தமாக தாம்பரம் சார்பதிவாளர் அலுவலகத்தின் மூலம் வழங்கபட்ட வில்லங்க சான்று சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.6** ஆகும். 01.12.2005 தேதியிட்ட 3ஆம் பிரதிவாதி செங்கல்பட்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா இடம் புல எண் 28/1B பிளாட் எண் 202 சம்மந்தமாக பதியப்பட்ட அ.வ.எண் 438/2004ல் ஏற்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.7** ஆகும். 01.12.2005 தேதியிட்ட 3ஆம் பிரதிவாதி செங்கல்பட்டு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாவா இடம் புல எண் 28/1B பிளாட் எண் 202 சம்மந்தமாக பதியப்பட்ட அ.வ.எண் 439/2004ல் ஏற்பட்ட தீர்ப்பு நகல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.8** ஆகும். 02.04.2012 தேதியிட்ட தாவா இடம் சம்மந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு W.P.No.28161/2007 உத்தரவு நகல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.9** ஆகும். 02.04.2012 தாவா இடம் சம்மந்தமாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனு W.P.No. 28162/2007 உத்தரவு நகல் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.10** ஆகும். 06.08.2025 தேதியிட்ட வில்லங்க சான்று புல எண் 28/1B ஆவண எண் 1974/1988 கணினி நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.11** ஆகும். 06.08.2025 தேதியிட்ட வில்லங்க சான்று புல எண் 28/1B ஆவண எண் 2191/1998 கணினி நகல் தாக்கல் செய்கிறேன் அது **பி.சா.ஆ.12** ஆகும்.

குறுக்குவிசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.21 13:07:41 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**